

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.3.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் 2025 –2026 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் (பயிற்சி) மரு. இரா.ஆனந்தகுமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பா.பொன்னையா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் செயலாளர் திருமதி த.ரத்னா, கூடுதல் இயக்குநர் (பொது) செல்வி ர.அனாமிகா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.3.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் 2025 –2026 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## முதலமைச்சரின் கிராமச் சாலைத் திட்டமும் –

# 3 இலட்சம் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டமும் எங்கு பார்த்தாலும் ஜொலிக்கும்!

## பேரவையில்– ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் – அமைச்சர் இ.பெரியசாமி பதிலுரை!

## 1200 புதிய நீர்த் தேக்கத் தொட்டிகள் 1.10 கோடி குடும்பங்களுக்கு குடிநீர் வசதி!

## 234 தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் ரூ.6000 கோடியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்!

**சென்னை, மார்ச் 27 -**

**சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மான்யக் கோரிக்கை மீதான விவாதத்தில் பதிலளித்து அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் பேசுகையில், முதலமைச்சரின் கிராமச் சாலைத் திட்டம் ஜொலிக்கும், கலைஞர் கனவு இல்லம் திட்டம் எங்கு பார்த்தாலும் ஜொலிக்கும், தேர்தல் வாக்குறுதிகளும் ஜொலிக்க தேர்தலில் 200 தொகுதியில் தி.மு.க. வெல்லும் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் இ.பெரியசாமி அவர்களின் பதிலுரை வருமாறு:-

ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் இ.பெரியசாமி அவர்களின பதிலுரை வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உயிரினும் மேலான தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்க விரும்புகிறேன்.

கடந்த 40 ஆண்டுகாலமாக எங்களுக்கெல்லாம் அரசியலில் வழிகாட்டியாக இருந்து, கழகத்தின் தலைவராக உயர்ந்து, இன்றைக்கு இந்தியத் திருநாட்டிலுள்ள முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக, எல்லோருக்கும் எல்லாம், திராவிட மாடல் நாயகர் எங்கள் முதல்வர் அவர்களுக்கு முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞரணிச் செயலாளராகவும், குறிப்பாக, விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு திட்டச் செயலாக்கத் துறைகளின் அமைச்சராக இருக்கிற எங்கள் மாண்பிற்குரிய ஆருயிர்த் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய வணக்கம்.

அவை முன்னவர் உட்பட முன்வரிசையில் அமர்ந்திருக்கிற அமைச்சர் பெருமக்களான அவை முன்னவர் துரைமுருகன் , கே.என். நேரு மற்றும் எ.வ. வேலு , நிதித் துறை அமைச்சர் உட்பட மிகவும் கடுமையாக உழைத்து, மிகத் திறமையாக தங்களுடைய துறைகளை நிர்வகித்து, நல்லமுறையில் இந்த அரசை நடத்திக் கொண்டிருக்கிற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், தங்கள் கருத்துகளைத் தெரிவித்த எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிற எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

### கலைஞர் கனவு இல்லம் திட்டம்!

தற்போது, கலைஞரின் கனவு இல்லம் திட்டம் என்பது மிகச் சிறப்பான திட்டமாகும். இந்தத் திட்டம் முதலமைச்சர் கடந்தாண்டு துவங்கி, இத்திட்டத்திற்காக 3,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். அந்த 3,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததில், இன்றுவரை சுமார் 25,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, சுமார் 70,000 வீடுகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் இன்று உரையாற்றிய உறுப்பினர்களும் இத்திட்டம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இத்திட்டத்திற்காக கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியான 3,500 கோடி ரூபாயில், இதுவரை 2,412 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, நீண்ட நெடுங்காலமாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, வீடு கட்டும் திட்ட வீடுகளில் 2 இலட்சம் வீடுகளுக்குமேல் பழுது இருந்தன.

அதையெல்லாம் நேரடியாகச் சென்று ஆய்வுசெய்து பார்த்தபோது, அவைகள் சிறிய பழுதுகள், பெரிய பழுதுகள் என்று எடுப்பதற்கு ஏறத்தாழ ஒரு இலட்சம் வீடுகள் தேர்வு செய்யப்பட்டு, அதிலே பழுதே நீக்க முடியாது என்றிருந்த வீடுகளில் 25 ஆயிரம் வீடுகளை எடுத்து, அந்தப் பழுது நீக்குவதற்கு ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்து முழுமையாக அந்த ஆயிரம் கோடி ரூபாயில் 90 சதவிகிதம் நிதி செலவு செய்யப்பட்டு, 90 ஆயிரம் வீடுகள் பழுதுநீக்கம் செய்யப்ப ட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)


ஏனெனில், சென்ற ஆண்டு எடுத்தோம். எடுத்தவுடனே, ஒரு இலட்சம் வீடுகளில் 90 ஆயிரம் வீடுகள் பழுது நீக்க ப்பட்டிருக்கின்றன. இதுவரைக்கும் இது போன்று சரித்திரத்தில் இருந்தது இல்லை. ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரை 10, 20 ஆண்டு காலம் எங்களுக்குத் தெரியும். ஏனெனில், ஒரு சட்டமன்ற உறுப்பினர் 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தான் பழுது நீக்கம் செய்ய முடியும். உங்கள் நிதியில்தான் கொடுத்தீர்கள். பல ஆண்டுகாலம் இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நீங்கள் வழங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதனால் 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள். கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில்கூட 50 ஆயிரம் ரூபாய்க்குமேல் பழுதுநீக்குவதற்கு ஒதுக்கியதே கிடையாது. அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

ஆனால், அதிகபட்சமாக ஒன்றரை இலட்சம், குறைந்தபட்சம் 70 ஆயிரத்திலிருந்து ஒன்றரை இலட்சம். அதனால்தான் 90 ஆயிரம் வீடுகள் பழுதுநீக்கப்பட்டு புது வீடுகளாக இன்றைக்கு 90 ஆயிரம் வீடுகள் காட்சியளிக்கிறது. இதுதான் இந்தத் திட்டத்தினுடைய சிறப்புமிகப்பெரிய வரவேற்பு. இப்போது அனைவரும் என்ன கேட்கிறார்கள், 360 சதுர அடி நீங்கள் PMAY வீடு திட்டத்திற்குப் போனால், எங்களுக்கு அந்த வீடு வேண்டாம்; எங்களுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுதான் வேண்டுமென்று கேட்கிறார்கள். உறுப்பினர் தங்கமணி கூட 8 இலட்சம் வீடுகள் எப்படி 2030 ஆம் ஆண்டுக்குள் கட்டுவீர்கள் என்று அன்றைக்குப் பேசுகின்றபோது கேட்டார். கட்ட முடியும். எங்களுடைய முதலமைச்சர் அவர்களிடம் நிச்சயம் முடியும் என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்திருக்கிறேன்.

ஏனெனில், இப்போது ஒரு இலட்சம் வீடுகள் கொடுத்திருக்கிறோம். சென்ற ஆண்டு ஒரு இலட்சம் வீடுகள், இந்த ஆண்டு ஒரு இலட்சம் வீடுகள் கொடுக்கப்பட்டுவிட்டன. இப்போது கொடுத்து உடனே அரசாணை போடப்பட்டுள்ளது; 25 ஆயிரம் வீடுகளுக்கு உடனே அரசாணை போடப்பட்டுள்ளது; நிதியமைச்சர் பட்ஜெட்டில் அறிவித்த அன்றைக்கே அரசாணை போடப்பட்டுவிட்டது. ஏப்ரல் மாதம் இந்த ஆண்டின் திட்டப் பணியில் ஒரு இலட்சம் வீடுகள் மற்றும் அந்த 25 ஆயிரம் வீடுகளுக்கான பணிகளும் துவங்கவிருக்கிறோம்.

அடுத்த மார்ச் மாதத்திற்குள் இந்த ஒன்றேகால் இலட்சம் வீடுகளும் முடித்து, இரண்டேகால் இலட்சம் வீடுகளும் கண்டிப்பாக முடிக்கப்படும். இதுதான் திராவிட மாடல் நாயகன் ஆட்சியினுடைய சாதனை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக, இங்கேகூடச் சொன்னார்கள்; உறுப்பினர் செல்வராஜ் பேசுகின்றபோது



இங்கே எப்படி நிதி வருகிறது என்று சொன்னார்கள். கலைஞருடைய கனவு இல்லம் திட்டத்திற்கு மொத்தமாக 3,500 கோடி ரூபாய். அதிலே, மாநில அரசினுடைய நிதி 2,369 கோடி ரூபாய். இதுமட்டுமல்லாமல், பகிர்மான நிதி 731 கோடி ரூபாய். பகிர்மான நிதிdivisible pool of taxes என்பது gross tax revenueல் வரும்.

### 98 ஊராட்சி ஒன்றிய கட்டிடங்கள்

இந்த ஆட்சியில் 4 ஆண்டு காலத்தில் 388 ஊராட்சி ஒன்றியங்களில் 98 ஊராட்சி ஒன்றியக் கட்டடங்கள் கட்டி முடித்துள்ளோம். உங்கள் ஆட்சிக் காலத்தில்

2017- 2021க்குள் மொத்தம் 55 ஊராட்சி ஒன்றியங்களுக்குதான் கட்டடங்கள் கட்டியிருக்கிறீர்கள். தற்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 98 ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், தற்போது ஒருங்கிணைப்பு நிதி 400 கோடி ரூபாய். ஆக மொத்தம் 3,500 கோடி ரூபாய். பகிர்மான நிதி Devolution grantக்கு அரசு ஏற்கெனவே சட்டம் இயற்றிவிட்டது. Devolution grantக்கு சட்டம் இயற்றியாகிவிட்டது என்று தெரிந்துதான் செல்வராஜ் பேசினீர்கள்.

அதனால் இதையெல்லாம் ஒருங்கிணைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. உங்களுக்கும் சட்டம் தெரியும். ஆகவே, உறுப்பினர் ஏ.கே செல்வராஜ் சந்தேகப்பட வேண்டாம். நீங்கள் உடனே அரசு நேரடியாக நிதி கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

### நிதி நெருக்கடியில் ஆட்சிக்கு வந்தோம்!

கொரோனா காலத்தில் எவ்வளவு நிதி நெருக்கடியில் ஆட்சிக்கு வந்தோம் என்று உங்களுக்குத் தெரியும். அதைத்தான் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். கலைஞர் கனவு இல்லத்தைப் பொறுத்தளவில் நீங்கள் வரவேற்கலாம். யார் கேட்டாலும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளிலும் இப்போதுகூட முதலிலே பேசுகின்றபோது உறுப்பினர் கடம்பூர் ராஜு , அவருடைய தொகுதியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்ற விவரங்களைச் சொல்லுங்கள் என்று கேட்டார்.

இங்கே சொல்கிறேன். அவருடைய சட்டமன்றத் தொகுதியில் கோவில்பட்டி ஒன்றியத்தில் 141 வீடுகளும், கயத்தாறு ஒன்றியத்தில் 71 வீடுகளும் ஆக மொத்தம் 212 வீடுகள். இதில் முழுமையாக முடிவுற்ற வீடுகள் 38, வண்ணப்பூச்சு 42 வீடுகள், பூச்சு வேலை 54 வீடுகள், கூரை போட்டது roof laid 73அதிலே கூரை மட்டும் 5 வீடுகள். ஆக மொத்தம் 212 வீடுகள், நம்முடைய கடம்பூர் ராஜு சார்ந்திருக்கின்ற கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இங்கே repairsஐப் பற்றி நான் சொன்னேன்.

அதற்கடுத்து, முதல்வர் கல்விக்காக மிகச் சிறப்பான நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அன்றைக்குப் பேசுகிறபோதுகூட 'நாங்கள் நிறைய பள்ளிகள் கட்டியிருக்கிறோம்' என்று உறுப்பினர் செங்கோட்டையன் சொன்னார்கள்.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் ஏறத்தாழ 1,122 கோடி ரூபாயில் 3,766 பள்ளிக்கூடங்கள் எடுக்கப்பட்டு, ஏறத்தாழ 3,100 பள்ளிக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்ற செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், கடந்தகால ஆட்சியில் பள்ளிகள் மேம்பாட்டிற்காக எவ்வளவு செலவழித்திருந்தார்கள் என்றால். மொத்தமாக 220 கோடி ரூபாய்தான் செலவழித்திருக்கிறார்கள். அதுதான் உண்மை.

### முதலமைச்சரின் கிராமச்சாலைத் திட்டம்

அடுத்து, முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்பது ஓர் அருமையான திட்டம். அதாவது, கடந்த காலங்களில் கிராமப்புற சாலைகள் மண் சாலைகளாகப் போடப்படும். பிறகு ஒரு BC Bituminous Concrete என்று சொல்வார்கள், தார் போடுவார்கள். அவ்வாறு அன்றைக்குப் போடுவதற்கு 25 இலட்சம், 30 இலட்சம் ரூபாய்தான் செலவு. ஆனால், இன்று எவ்வளவு கொடுக்கிறோம் என்றால், கப்பி சாலை போடுகிறோம், அதற்குமேல், BM, BC என்று, இங்கு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அமர்ந்திருக்கிறார். எனக்கு இந்த terms எல்லாம் தெரியாது. அதுபற்றி இப்போதுதான் கேட்டேன். அதனை Bituminous Macadam, Bituminous Concrete என்று சொல்கிறார்கள். நமது நெடுஞ்சாலைத் துறை, தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சமமாக இன்றைக்கு இந்தச் சாலைகளை அமைத்து கிராமங்களை இணைத்திருக்கிறது என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 4,000 கோடி ரூபாயில், மொத்தம் 15,545 கிலோ மீட்டர் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. செல்வராஜ் கூட 9,000 கி.மீ. என்று சொன்னார். அது 10,455 கி.மீ.

அதற்குப் பிறகு, 1,800 கோடி ரூபாயில் ஏறத்தாழ 3,888 கி.மீ. சாலைகள் இப்போது போடப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நம்முடைய நிதி அமைச்சர் 6,112 கி.மீ. சாலைகளுக்கு ஏறத்தாழ 2,200 கோடி ரூபாய் நிதியொதுக்கியுள்ளார். ஆக மொத்தம், இரண்டு 10,000 கி.மீ. நீங்கள் கூட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள். இதில் ஒரு 3,888 கி.மீ. அதில் ஒரு 6,112 கி.மீ. சிந்தனைசெல்வன் அவர்களே, நீங்கள் கூட்டினால், இதில் சுமார் ஒரு 10,000 கி.மீ., அதில் ஒரு 10,455 கி.மீ. ஆக மொத்தம், சுமார் 20,000 கி.மீ. சாலைகள் இந்த ஆண்டில் அமைக்கப்பட்டுவிடும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பிரதமர் கிராமப்புற சாலைகள் திட்டம். இத்திட்டத்தில் ஏறத்தாழ 3,300 கோடி ரூபாயில் 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையில், கிட்டத்தட்ட 5,000 கி.மீ. சாலைகளை அமைத்துள்ளோம். பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தில் 5,000 கி.மீ. போட்டாகிவிட்டது. இது 500 மக்கள்தொகையை இணைக்கக் கூடிய சாலைகள். எங்கெல்லாம் 500 மக்கள்தொகை கொண்ட குடியிருப்புகள் உள்ளனவோ, அங்கெல்லாம் PMGSY திட்டத்தில் சாலைகள் போடப்படுகின்றன. அதுபற்றி உங்களுக்கே நன்றாகத் தெரியும். PMGSY திட்டத்தில் சுமார் 803 பாலங்களை எடுத்தோம். அதில் 83 பாலங்கள் முடிக்கப்பட்டுவிட்டன. இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, 5,006 கி.மீ. சாலைகளும் அமைக்கப்பட்டுவிட்டன.

தற்போது என்ன பிரச்சினை உள்ள தென்றால், தமிழ்நாட்டில் இன்னும் 8 கிராமங்கள்தான் இணைக்கப்படாமல் உள்ளன. இந்தியாவிலேயே இவ்வாறு இருக்கக்கூடிய ஒரே மாநிலம் தமிழகம் தான். (மேசையைத் தட்டும் ஒலி) எட்டே எட்டு கிராமங்கள்தான் இன்னும் இணைக்கப்படாமல் உள்ளன. காரணம், Forest Department. வனத் துறையின் அனுமதி பெறுவதில் ஏற்பட்டுள்ள தடங்கல் காரணமாக, இன்னும் 8 ஊர்கள்தான் இணைக்கப்படாமல் உள்ளன.

இதில் என்ன சிக்கல் என்றால், PMGSY திட்டத்தில் இந்தியாவில் அனைத்து மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கவேண்டும். இப்போது நாங்கள் மத்திய அரசைக் கேட்பது என்னவென்றால், 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலைகளை upgrade செய்யவேண்டும். ஏனென்றால், 10 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட சாலைகள் என்றால் மிகவும் சேதமாகியிருக்கும். அவற்றை renewal செய்வதைவிட upgrade செய்யவேண்டும், தரமுயர்த்த வேண்டும். நாங்கள் தமிழகத்தில் அனைத்து சாலைகளையும் போட்டுவிடுவோம். ஏனென்றால், தமிழ்நாடு ஒரு வளர்ச்சி பெற்ற மாநிலம். இந்தியாவில் வளர்ச்சி பெற்ற ஒரே மாநிலம் தமிழகம். நம்முடைய முதல்வர் தளபதியார் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, அந்த அளவிற்கு உயர்வைப் பெற்றிருக்கிறது. எல்லா சாலைகளும் போடப்பட்டிருக்கின்றன. 500 மக்கள்தொகை கொண்ட கிராமங்கள் எதுவும் இப்போது தமிழகத்தில் இணைப்பதற்கு இல்லை. அதற்கு வழியில்லை. இதுகுறித்து நாங்கள் பல கடிதங்கள் எழுதியிருக்கிறோம். நான்கூட மத்திய அமைச்சரிடம் பேசி, (குறுக்கீடு) அதை இணைக்க முடியாது. அதை பார்த்துக் கொள்வார்கள்.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்!

நான் சொல்வது என்னவென்றால், தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதிப் பகிர்வு வரவில்லை. நான் அதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன். நமக்கு ஒவ்வொரு திட்டத்திற்கும் நிதிப் பகிர்வு வரவேண்டும், பகிர்வு கட்டாயம் கிடைக்கவேண்டும் அல்லவா? அதுதான் நாம் இருக்கக்கூடிய கூட்டாட்சித் தத்துவத்திற்கு உண்மை. நிதிப் பகிர்வு இல்லையென்றால் எவ்வாறு செயல்படமுடியும்? நிதிப் பகிர்வு, அதைத்தான் கேட்கிறோம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த ஆட்சிக்காலத்தில், இது NNTNamakku Name Thittam என்பது உங்களுக்குத் தெரியும். உடனே பெயரை மாற்றினார்கள். NNTக்கும் ஒரு பெயரை மாற்றினார்கள்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை தாய்த் திட்டம் என்று மாற்றினார்கள் என்பதை நான் அப்போது பேசும்போதே கூறிவிட்டேன். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது 19962001ல் ஆரம்பிக்கப்பட்டது; 2006- 2011 ஆம் ஆண்டு வரையிலும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ன்கீழ், 6,000 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதுபோக, கடந்த நான்கு ஆண்டுகாலத்தில் கிட்டத்தட்ட 4,200 கோடி ரூபாய்க்கும்மேல் இத்திட்டத்திற்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது. தற்போது இந்த ஆண்டிற்கும் 1,200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அனைத்துக் கிராமங்களுக்கும் அனைத்துத் திட்டங்களும் சராசரியாக சென்று சேர வேண்டும் என்பதுதான் 'எல்லார்க்கும் எல்லாம்' ஆகும். அந்த அடிப்படையில், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தற்போது பல்வேறு துறைகளால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக முதல்வர் சுமார் 6,000 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

NNTNamakku Name Thittam; முத்தமிழறிஞர் கலைஞர் நமக்கு நாமே திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தையும் தான் கொண்டு வந்தார்கள். , அதன் பெயர்களை மாற்றினார்கள். நமக்கு நாமே திட்டத்தை தன்னிறைவுத் திட்டம் என்று மாற்றினார்கள்; NMTநமக்கு நாமே திட்டம் நாம் கொண்டு வந்தது என்பதால் அதை self sufficient scheme என்று மாற்றினார்கள். அதற்காக கடந்த ஆட்சிக் காலத்தில் 150 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருந்தார்கள். முதல்வர் ஆட்சிக்கு வந்தவுடனே, நமக்கு நாமே திட்டத்தை கண்ணாகக் கருதி கடந்த நான்காண்டு காலத்தில் 450 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ததையடுத்து, பல்வேறு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்!

பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்; முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் எல்லோரும் சமத்துவமாக வாழ வேண்டும் என்பதற்காக, அதாவது அனைவரும் சாதி சமயமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு தந்தை பெரியார் அவர்களின் பெயரால் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தை உருவாக்கினார்கள் என்பது நம அனைவருக்கும் தெரியும். முதலில் 148சமத்துவபுரங்கள் கட்டப்பட்டன. அதற்குப் பிறகு வந்த அரசு அத்திட்டத்தை செயல்படுத்தவில்லை. அதற்குப் பிறகு 88 சமத்துவபுரங்கள் கட்டப்பட்டன. 148+88 என 226 சமத்துவபுரங்கள் கட்டப்பட்டன. நான் இந்தத் துறைக்கு பொறுப்பேற்ற பிறகு, இந்த ஆண்டு 8 சமத்துவபுரங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் சுமார் 20,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த 20,000 வீடுகளும் புதுப்பிக்கப்பட்டு, புதுப்பொலிவுடன் விளங்குகின்றன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தை இன்னும் 50 ஆண்டுகாலமானாலும் யாரும் அசைக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்